

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 23.09.2026


# மெகாவாட் பொய்கள் !

**“ரெண்டே பேருக்கு நடுவுலதான் போட்டியே! ஒன்னு மின்வெட்டு... இன்னொன்னு அரிவாள் வெட்டு!” என்று ஒரே போடாகப் போட்டார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்! நான்கு மாத ஆட்சி நான்கே சொற்களில் முடித்துவிடப்பட்டது.**

விஜய் ஆட்சிக்கு வந்தது முதல் வெளிச்சம் போய்விட்டது என்பதன் அடையாளமாக எங்கும் எப்போதும் எல்லா ஊரிலும் எல்லா நேரத்திலும் மின்வெட்டு.மின்சாரம் கட்!

‘அஞ்சு கட்சி மாறிய அமாவாசையான’ இத்துறையின் அமைச்சர் நிர்மல்குமாருக்கு இதுபற்றிய கூச்சமே இல்லை. தனது துறையைக் கவனிக்கத் துப்பு இல்லாமல் அடுத்தவர் துறைக்கு எல்லாம் ஆளுக்கு முந்தி பதில் சொல்லித் திரிகிறார். எப்போதாவது மின்வெட்டு குறித்து பதில் சொல்ல முன் வந்தால் மெகாவாட் கணக்கில் பொய்களைச் சொல்கிறார்.

தமிழ்நாட்டில் மின்வெட்டே கிடையாது என்பார். ஆதாரத்துடன் கேள்வியை எழுப்பினால் பொய்மூட்டைகளை அவிழ்ப்பார்.

இதுவரை அவர் சொன்ன பொய்களைப் பாருங்கள்...

★ தி.மு.க.வினரால் மின்வெட்டு ஏற்படுத்தப்படுகிறது.

★ மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு சில ஊழியர்களால் திட்டமிட்டு மின்வெட்டு ஏற்படுகிறது.

★ பியூஸ் கட்டையைத் திருடிச் சென்று விடுவதால் மின்வெட்டு ஏற்படுகிறது.

★ ஆமாம் மின்சார பற்றாக்குறை இருக்கிறது. அதனால் வெளிச்சந்தையில் மின்சாரம் வாங்க முயற்சித்து வருகிறோம்.

★ வெயில் அதிகமாக இருப்பதால் மின்சாரத் தேவை அதிகம் ஆகிவிட்டது.

★ மின்வெட்டைப் பெரிதாக்குகிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில் 14 மணி நேரம் மின்வெட்டு இருக்கிறது. பல மணிநேரம் மின்சாரம் இல்லாமல் அங்கு இருக்கிறார்கள்.

★ மின் துறை ஊழியர்கள் மத்தியில் 1 விழுக்காடு ஊழியர்கள் கருப்பு ஆடுகள். அவர்களால் மின்வெட்டு திட்டமிட்டு நடத்தப்படுகிறது.

இந்த வரிசையில் நேற்றைய தினம் ஒரு மெகா பொய்யைச் சொல்லி இருக்கிறார். “பி.எஸ்.என்.எல். கேபிள் பணிக்களுக்காக தோண்டுவதால் மின் வெட்டு ஏற்படுகிறது” என்கிறார். நாடு முழுக்க பி.எஸ்.என்.எல். பணிக்காக தோண்டுகிறார்கள் என்றால் அத்துறைக்கு எத்தனை லட்சம் ஊழியர்கள் தேவை? ஊர் முழுக்க குண்டும் குழியுமாகக் கிடக்கிறதா? ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டு மக்கள் காதில் பூ சுற்றுகிறார் அமைச்சர் நிர்மல்குமார்.

இவருக்கு முட்டுக் கொடுக்க வந்துள்ளார் இன்னொரு அமைச்சர் செங்கோட்டையன். அவர் என்ன சொன்னார் என்றால்...

★ காற்று அடிப்பது குறைவாக இருக்கிறது. அதனால் காற்றாலை மின்சாரம் கிடைக்கவில்லை.

★ வெளிசந்தையில் எங்கேயும் மின்சாரம் வாங்க முடியவில்லை. அதனால் தான் மின்சாரம் தட்டுப்பாடு என்கிறார் செங்கோட்டையன்.

இன்னொரு மகா புத்திசாலி இந்த அமைச்சரவையில் இருக்கிறார். ‘ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு 49 ரூபாய் திருப்பித் தருகிறார்கள்’ என்று சொன்ன புத்திசாலி. ஆதவ் அர்ஜூனா என்பது அவர் பெயர். இவர் ‘நான்கு கட்சி மாறிய அமாவாசை’. அவர் சொல்கிறார்...

“மழை குறைந்ததால் தண்ணீரில் இருந்து வரும் மின்சாரம் குறைந்திருக்கிறது. காற்று நின்று போனதால் அந்த மின்சாரமும் கிடைக்கவில்லை” என்று சொல்கிறார் ஆதவ் அர்ஜூனா. இதைக் கல்வெட்டாக அடித்து அதற்கு கீழே ஆதவ் அர்ஜூனா என்று போட்டால் காலா காலத்துக்கு பயன்படும், வழிகாட்டும் பொன்மொழி ஆகும். எவ்வளவு பெரிய புத்திசாலிகளை விஜய் தன்னைச் சுற்றி வைத்துள்ளார் என்பதற்கு உதாரணம் இவர்களது பேச்சுகள்.

**ஆட்சி நடத்த துப்பு இல்லை. திராணி இல்லை. மக்கள் தேவைகளை அறிந்து வழங்க அறிவு இல்லை. திறமை இல்லை. வாய்க்கு வந்த காரணத்தைச் சொல்கிறார்கள். ‘காரணம் சொல்பவன் காரியம் செய்ய மாட்டான்’ என்பது பழமொழி. அதைத்தான் பார்க்கிறோம்.**

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டால் ஒட்டுமொத்த தமிழ்நாடும் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. முதலமைச்சரின் பெரம்பூர் தொகுதியே இருளில் கிடக்கிறது. மின்சாரம் போனால் நான்கு ஐந்து மணிநேரத்துக்கு வருவது இல்லை. குழந்தைகள், முதியோர், நோயாளிகள் பெரும் அவதிக்கு ஆளாகி வருகிறார்கள். வீட்டில் தூங்க முடியாமல் வாசலில் உட்கார்ந்து இருக்கிறார்கள் மக்கள். சாலை மறியல் செய்கிறார்கள். மின்வாரிய அலுவலகங்கள் பூட்டுப் போடப்பட்டுள்ளன. பொதுமக்களின் போன் அழைப்புகளை எடுக்க ஆள் இல்லை. மின்வாரிய அலுவலகங்கள் பொதுமக்களால் முற்றுகையிடப் படுகின்றன.

**பொதுமக்களுக்கு நிம்மதி போய்விட்டது என்றால் தொழில் துறையினருக்கு தொழிலே போய்விட்டது. தொடர் மின்வெட்டு காரணமாக தொழில் நிறுவனங்களை தொடர்ச்சியாக இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கோவை தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் நாள் தோறும் 10 கோடி ரூபாய் இழப்பு என்று செய்திகள் வெளியாகி உள்ளன. கோவையில் நாள் தோறும் 7 முதல் 10 முறை மின்வெட்டு ஏற்படுவதாக தொழில் துறையினர் தெரிவிக்கிறார்கள். தொடர் மின்வெட்டு காரணமாக மூலப்பொருள் வீணாகிறது. இயந்திரங்கள் பழுதடைகின்றன. தொழிலாளர்களுக்கு ஊதியம் தரப்படுகிறது, ஆனால் வேலை இல்லை என்கிற நிலைமை ஏற்படுகிறது.**

இப்படி ஒட்டுமொத்த தமிழ்நாடும் இருட்டில் தள்ளப்பட்டுள்ளது விஜய் ஆட்சியால். ஏன் எங்கும்

மின்சாரம் இல்லை என்றால், ஒரு அமைச்சர் தி.மு.க.வைக் குறை சொல்கிறார். இன்னொரு அமைச்சர் காற்றைக் குறை சொல்கிறார். மற்றொரு அமைச்சர் மழையையும் காற்றையும் குறை சொல்கிறார். இயற்கையையே சவாலுக்கு அழைக்கிறார்கள் சினிமாவைப் போல!

**ஆளத் தெரியாத விஜய் படம் நடிக்கப் போகலாம். அமைச்சர்கள் அவருக்கு கதை பண்ணப் போகலாம்!**

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்:

## கழக சட்டத்துறை ஆலோசனைக் கூட்டம்!

### ஆர்.எஸ். பாரதி – என்.ஆர். இளங்கோ – இரா. கிரிராஜன் பங்கேற்பு!

செங்கல்பட்டு, செப். 23 -

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் குறித்து கழக சட்டத்துறை ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடும், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் தொடர்பான கழக சட்டத் துறையின் ஆலோசனைக் கூட்டம் செங்கல்பட்டு கணேஷ் பவன் அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் என். கானகராஜ் வரவேற்புரையாற்ற, பி.கார்த்திகேயன் தலைமை வகித்தார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, வழக்கறிஞர் இரா. கிரிராஜன் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் சட்டத்துறையின் இணைச் செயலாளர்களான கே.எஸ்.இரவிச்சந்திரன் மற்றும் ஜெ. பச்சையப்பன், துணைச் செயலாளர்கள் கே.சந்த்ரு, மருது கணேசன், பெ. ரகு, தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜே.சரவணன், மீஞ்சூர் சுரேஷ், சுவை சுரேஷ், மற்றும் வழக்கறிஞர்கள் ஆர். திருமுருகன், ஜி. தேவராஜன், கலையரசன் நடராஜன், சுரேஷ்குமார், ரமேஷ்குமார், ஜி. வடிவேல் உள்ளிட்ட மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட வழக்கறிஞர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




‘தி.மு.கழகமே மகளிர்க்கு பாதுகாப்பு அரண்!’

## பூ வியாபாரம் செய்யும் சரோஜா சமூக வலைதளப் பதிவு!

### கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. நேரில் சந்தித்து பாராட்டு!

சென்னை, செப்.23-

சென்னை தேனாம்பேட்டை அருகே உள்ள பகுதியைச் சார்ந்தவர் சரோஜா. இவர் அப்பகுதியில் பூ வியாபாரம் செய்து வருகிறார். சமீபத்தில் சமூக வலைதளங்களில் சரோஜா, தி.மு.க. தனக்கு செய்த நன்மைகளையும், தி.மு.க. இயக்க மகளிரும்தான் இறப்பிற்கு பின்னும் தனக்காக நிற்பார்கள் என்று உருக்கமாக பேசியிருந்தார்.



அதற்கு பதிலளித்த கனிமொழி ராஜாத்தி கருணாநிதி, சரோஜாவை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து எப்போதும் உங்களுக்காக நாங்கள் உடன் இருக்கிறோம்.

நீங்கள் பேசியதை சமூக வலைதளங்களில் பார்த்தேன். அது மிக நன்றாக இருந்தது, மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. உங்களை சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி. உங்களுக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் எங்களிடம் சொல்லுங்கள் எனக் கூறினார்.

தொடர்ந்து அவருக்காக புது சேலை வழங்கி அவரோடு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

அப்போது பேசிய சரோஜா, தி.மு.க. என்றால் எனக்கு உயிர். என் உயிர் உள்ள வரை தி.மு.க. இயக்கத்தில் தான் இருப்பேன். இது எனது கொள்கை, இதில் எந்த மாறுபாடும் எனக்கு கிடையாது எனக் கூறினார்.

அமெரிக்க நியூசெர்சி மாநிலத்தில்

## ‘திராவிட நாள்’ கருத்தரங்கம்!

### தமிழ்க் கேள்வி செந்தில்வேல் பங்கேற்பு!

நியூயார்க், செப். 23-

அமெரிக்காவில் முதல் முறையாக நியூசெர்சி மாநிலத்தில் அமெரிக்க தமிழர்களால் செப்டம்பர் மாதம் 19 & 20 தேதிகளில் “திராவிட நாள்” கருத்தரங்கு “திரைகடல் ஓடியும் திராவிடம் தேடு” என்னும் கருப்பொருளில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இக்கருத்தரங்கையொட்டி அமெரிக்காவில் நியுசெர்சி, சிகாகோ, அட்லாண்டா, டாலஸ், சான்பிரான்ஸ்கோ, வாசிங்கடன் DC ஆகிய நகரங்களில் பெரியார் பிறந்த நாள் நடை ஓட்டமும் நடைபெற்றது.

அமெரிக்காவில் இயங்கும் திராவிட அமைப்புகளான வெளிநாடு வாழ் தமிழர் இந்தியர் நலச் சங்கம் (NRTIA USA), பெரியார் பன்னாட்டமைப்பு, பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் (PASC) ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய “திராவிட நாள்” கருத்தரங்கில் மூத்த ஊடகவியலாளரும் தமிழ்க் கேள்வி செந்தில்வேல் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் இக்கருத்தரங்கை குழுவின் தலைவர் மருத்துவர் சோம.இளங்கோவன், செயலாளர் நியுசெர்சி பாலா, பொருளாளர் இரவி பெருமாள்சாமி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

செப்டம்பர் மாதம் என்பது பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள், திராவிட முன்னேற்ற கழகம் துவங்கிய நாள் என பலச் சிறப்புகளை கொண்ட முப்பெரும் விழாவாக இக்கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கை திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி அவர்கள் திராவிடத்தின் சிறப்புகளை கூறி கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

கருத்தரங்கிற்கு திராவிடர் கழகத்தின் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் தமிழர்கள் திராவிடத்தை நாட வேண்டிய அவசியம் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் “உதயநிதி ஸ்டாலின்” அவர்கள் இன்றைய சூழலில் அனைவரும் திராவிட கொள்கைகளை, தமிழர்களுக்கு அதனால் ஏற்பட்ட பயன்களை நாம் அனைவருக்கும் சொல்ல வேண்டிய கட்டாயம் இருப்பதை சொல்லி திராவிடம் வெல்லட்டும் எனக் கூறி வழங்கிய வாழ்த்து செய்தி ஒலிப்பரப்பட்டது.

1. கருத்தரங்கில் பத்து வயது நிரம்பிய ஆதவன் “We are Dravidians” என்னும் தலைப்பில் பேசினார்.

2. திராவிட இனத்தின் வரலாறாக அயோத்திதாச பண்டிதர் காலத்திலிருந்து, நீதிகட்சி, தந்தை பெரியார், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்ற கழகம் ஆகியவற்றால் தமிழினத்திற்கும், தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டிற்க்கும் ஏற்பட்ட பயன்களை அம்பேத்கர் கிங்ஸ்டி சர்க்கிள் அமைப்பை சேர்ந்த கார்த்தி, மருத்துவர் சோம இளங்கோவன், ம.வீ. கனிமொழி, நியுசெர்சி பாலா, இரவி ஆகியோர் விரிவாக எடுத்துரைத்தனர்.

3. குழந்தைகள் திராவிட தலைவர்களை ஓவியமாக்கும் போட்டி, இளம் பருவ வயதினரான சிகாகோ ஹரி, லண்டன் மீரா ஆகியோர் திராவிட கொள்கைகளின் சிறப்புகளை இந்த கால தலைமுறைக்கு ஏற்றவாறு சமூக வலைதளங்களில் செயல்படுவதை விளக்கினர்.

4. இறுதியாக தமிழ்க் கேள்வி செந்தில்வேல் அவர்கள் திராவிட இனத்தால் தமிழ் சமூகம் அடைந்த பயன்களை, அதன் கொள்கைகளை நம் குடும்பத்தில் பேச வேண்டிய அவசியத்தையும், அடுத்த தலைமுறைக்கு இதை எடுத்த செல்ல வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருப்பதை மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார்.

இக்கருத்தரங்கிற்கு லண்டன், அமெரிக்காவின் நியுயார்க், நியுசெர்சி, டெலவேர், பென்சில்வேணியா, விர்ஜீனியா, கரோலினா, மில்வாக்கி, டாலஸ் ஆகிய மாநிலங்களிலிருந்து அமெரிக்க தமிழர்கள் குடும்பங்களோடு கலந்து கொண்டனர்.

இறுதியாக இவ்விழாவை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து அமெரிக்காவில் நடத்துவோம் என்றும், திராவிட கொள்கைகளை அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்வோம் என ஒவ்வொருவரும் உறுதி கூறினர்.



அமெரிக்க நியூசெர்சி மாநிலத்தில் நடைபெற்ற ‘திராவிட நாள்’ கருத்தரங்கில் தமிழ்க் கேள்வி செந்தில்வேல் பங்கேற்றுப் பேசினார்.